## ADDITIONAL DISTRICT COURT, DINDIGUL

**O.S.No.304/2020**

Mr.E.Dinesh Sriram ... Plaintiff

/Versus/

Mrs. K.Kavitha ... Defendant

## VALUATION SLIP

| | | |
|---|---|---|
| 1. Sec. and Sub-Section of the Act | .. | Sec. 42 of T.N.C.F. Act. |
| 2. Nature of the Suit | .. | Suit for Specific Performance |
| 3. Annual Revenue or rent payable | .. | - |
| 4. Market Value | .. | Rs.60,00,000/- |
| 5. Value for purpose of Court Fees | .. | Rs.1.80,000/- C.F. paid |

/By Order/

Head Clerk,

Additional District Court,

Dindigul.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22–ஆம் நாள் செவ்வாய்க் கிழமை

**<u>அசல் வழக்கு எண். 304/2020</u>**
**<u>CNR. No. TNDG01-003603-2020</u>**

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் டவுன், முனிசிபல் காலனி, கதவிலக்கம் .16–ல் வசித்து வரும் திரு. K.R.இளவழகன் குமாரர், இந்து சுமார் 29 வயதுள்ள E.தினேஷ்ஸ்ரீராம்.

... வாதி

**/எதிர்/**

திண்டுக்கல் டவுன், ரவுண்ட் ரோடு, ராம்நகர், செண்பக மலர் தெரு, கதவு எண். 49/2 முகவரியில் வசிக்கும் திரு.கிருஷ்ணமூர்த்தி மனைவி , இந்து சுமார் 44 வயதுள்ள திருமதி.K.கவிதா.

... பிரதிவாதி

21.03.2016 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாக்கி தொகை ரூ.10,00,000/–ஐ பிரதிவாதி பெற்றுக் கொண்டு, வாதிக்கு பிரதிவாதி தாவா சொத்தைப் பொறுத்து கிரையப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டுமென ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காகவும், மாற்றுப்பரிகாரமாக வாதி செலுத்திய முன்பணத்தை வட்டியுடன் பிரதிவாதி செலுத்த உத்திரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.

நீதிமன்ற முத்திரைக் கட்டண சட்டம் பிரிவு 22–ன் படி தொகை ரூ.1,80,000/– கட்டப்பட்டுள்ளது.

வழக்குமூலம் எழுந்த நாள் – 21.03.2016, 25.08.2020 – ரவுண்ட் ரோடு, ராம்நகர், திண்டுக்கல் டவுன்.

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள்– 21.11.2020.
தாவா கோப்பில் எடுக்கப்பட்ட நாள்– 24.11.2020.

**தீர்ப்பாணை**

இவ்வழக்கானது 21.11.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எஸ்.குமரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஏ.செல்வம் அவர்கள் ஏற்கனவே ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யாததாலும், பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததாலும் தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் தீர்ப்பாணையை வழங்குகின்றது.

1. **வாதி கிரைய பாக்கித் தொகை ரூ.10,00,000/–ஐ இன்றிலிருந்து மூன்று வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.**
2. **அதனை பிரதிவாதி பெற்றுக் கொண்டு தாவா சொத்தைப் பொறுத்து இரண்டு மாத காலத்திற்குள் வாதியின் செலவில், வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதி பதிந்து , சொத்திதன் சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டுமென ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வழங்கி செலவு தொகையுடன் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.**
3. **வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வழங்கப்பட்டதால், மாற்றுப் பரிகாரத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.**

**4. வழக்கின் செலவு தொகை ரூ.2,14,705.00/-பைசா வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டுமெனவும் கட்டளையிடப்படுகிறது.**

************

<u>சொத்து விபரம்</u>

திண்டுக்கல் ரீடி, திண்டுக்கல் ஜாயிண்ட் 1ம் நிர் நம்பர் திண்டுக்கல் டவுன், 6-வது வார்டு , ரவுண்ட் ரோடு, மையப்பகுதியில் , கீழ் சரகில் உள்ள T.S.No.1660/3 நம்பர் புஞ்சை ஏ1 சதுரடி 26438-ல் 15 மனைகளாகப்பிரித்துள்ளதில் தென்புரத்தில் மேற்கிலிருந்து 10, 12, 13, 14 மற்றும் 15 நம்பர்கள் மனைகளை சப்டிவிசன்படி செய்து உள்ளதில் தற்போதைய சப்டிவிசன்படி T.S.No.1660/3J நம்பரில் கட்டுப்பட்ட மேற்படி 12ம் நம்பர் மனைகளில் கீழ்புரம் உள்ள 12 Part நம்பர் மனையில் கட்டப்பட்டுள்ளதும் கதவு எண்.49/2-க்கும் வரி விதிப்பு எண்.26527க்கும் சம்மந்தப்பட்டதுமான RCC லாகட மேல்மாடி மனைவீடு வகையறாவுக்கு நான்குமால் விபரம்.

T.S.No.1660/5 மற்றும் T.S.No.1660/6 நம்பர்களில் உள்ள இடங்களுக்கும் ..... வடக்கு

T.S.No.1660/3J நம்பரில் மேற்படி 12ம் நம்பர் மனையில் மேல்புரம் உள்ள

12 Part மனைக்கும் ...... கிழக்கு

T.S.No.1660/3 நம்பரில் விடப்பட்டுள்ள 20 அடி அகல கிழமேல்

11வது ரோட்டுக்கும் ..... தெற்கு

T.S.No.1660/3K நம்பரில் மேற்படி 13ம் நம்பர் மனைக்கும் ...... மேற்கு

இதற்குள் கிழமேலில் இருபுரமும் அடி 22, தென்வடலில் இருபுரமும் அடி 75க்கு சதுரடி 1650க்கு 153.29 சதுரமீட்டர் உள்ள மனையிடமும், அதில் சுமார் 900 சதுரடியில் கட்டப்பட்டுள்ள RCC லாகட தரைதளமும், அதன்மேல் சுமார் 900 சதுரடியில் கட்டப்பட்டுள்ள RCC லாகட முதல்தளமும் அவைகளின் கட்டிய சாமான்கள், கதவு நிலைகள், ஜன்னல்கள், வாசல், ப்ளசவுட் மற்றும் காலியிடம் வகையறா சகலமும் மற்றும் மேற்படி வீட்டில் இணைக்கப்பட்டுள்ள S.C.No.316 என்பதாகவுள்ள, மின் இணைப்பும் , அதன் டெபாசிட் தொகை வகையறா சகலமும், மேற்படி வீட்டில் இணைக்கப்பட்டுள்ள மாநகராட்சி குடிநீர் குழாய் இணைப்பு எண்.65077 மேற்படி

வீட்டில் போடப்பட்டுள்ள போர்வெல் 1ம் அதில் இணைக்கப்பட்டுள்ள 1/2 HP கம்பரசர் மோட்டார் வகையறாவும்,மற்றும் மேற்படி வீட்டிற்கு ஏற்பட்ட பொது ரோடு பாத்தியங்களும் சேர்ந்து இதற்கு கட்டுப்பட்டது.

மேற்படி சொத்து திண்டுக்கல் நகர்மன்ற எல்லைக்குட்பட்டது.

**செலவு தொகை விவரம்**

| வ. எண். | செலவு தொகை விபரம் | வாதிக்கு ரூ. பை. |
|---|---|---|
| 1. | வழக்குரைக்கான வில்லை | 1,80,000.00 |
| 2. | வக்காலத்திற்கான வில்லை | 10.00 |
| 3. | கட்டளை சேர்ப்பிப்பதற்கு | 70.00 |
| 4. | இடையில் கொடுக்கப்பட்ட மனுக்களின் செலவு தொகை | 20.00 |
| 5. | கட்டளை தயாரிக்க | 5.00 |
| 6. | வாதுரைக் கட்டணம் | 25.00 |
| 7. | வழக்கறிஞர் கட்டணம் சீனியர்<br>ஜூனியர் | 34,575.00<br>-- |
| | **மொத்தம்** | **2,14,705.00** |

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2022.11.30 10:42:07 +0530

**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**